අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, පෙරහුරු පරීක්ෂණය - 2025 (2026)

**கல்வி, உயர் கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சு**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, முன்னோடிப் பரீட்சை - 2025 (2026)**

**ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II**
**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் I, II**
Business and Accounting Studies **I, II**

60 | T | I, II

පැය තුනයි
***மூன்று மணித்தியாலம்***
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் I

**அறிவுறுத்தல்கள் :**
* **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

- **பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

லல்லி சஞ்ஜய் என்பவர் க.பொ.த. (உ/த) பரீட்சையின் பின்னர் அழகுக்கலை பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பின்னர் நகர மத்தியிலுள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் வாடகைக்குப் பெறப்பட்ட கட்டடமொன்றில் **"லல்லி சலூன்"** என்ற பெயரில் வியாபார நிறுவனமொன்றை ஆரம்பித்தார். இந்நிறுவனம் உயர்தரமான சேவையை வழங்குவதால் அதிகளவான வாடிக்கையாளர்கள் காணப்பட்டனர். இதனால் அவரின் நண்பியான மாலதியை வியாபாரத்தின் ஊழியராக இணைத்துக் கொண்டார்.

1. "லல்லி சலூன்" நிறுவனம் உள்ளடங்கும் வணிக அமைப்பானது,
(1) தனிவியாபாரம் (2) தனியார் கம்பனி (3) பொதுக் கம்பனி (4) பங்குடமை வியாபாரம்

2. மேற்காட்டப்பட்ட சம்பவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள உற்பத்திக் காரணிகளாவன,
(1) உழைப்பு, மூலதனம், நிலம் (2) மூலதனம், நிலம், முயற்சியாண்மை
(3) உழைப்பு, முயற்சியாண்மை, மூலதனம் (4) நிலம், உழைப்பு, முயற்சியாண்மை

3. "லல்லி சலூன்" நிறுவனத்துடன் தொடர்புடைய அகச்சூழல் மற்றும் புறச்சூழல் காரணிகளை முறையே காட்டும் விடையானது,
(1) உரிமையாளர், வாடிக்கையாளர் (2) உரிமையாளர், ஊழியர்
(3) வாடிக்கையாளர், உரிமையாளர் (4) ஊழியர், உரிமையாளர்

4. மேற்காட்டப்பட்ட சம்பவத்தில் குறிப்பிடப்பட்ட வணிகத்தினை உற்பத்தியின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தும் போது,
(1) பொருள் உற்பத்தி வணிகம் (2) சிறிய மற்றும் நடுத்தர வணிகம்
(3) தனியுடமை வணிகம் (4) சேவை வழங்கும் வணிகம்

5. "லல்லி சலூன்" நகர மத்தியிலுள்ள பஸ்தரிப்பிடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதானது வணிகத்தின்,
(1) ஒரு பலமாகும் (2) ஒரு சவாலாகும் (3) ஒரு வாய்ப்பாகும் (4) ஒரு அச்சுறுத்தலாகும்

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 6 ஆம் 7 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

**“சமூக நண்பர் சங்கம்”** அண்மையில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவு பொதிகளை விநியோகித்தது.

6. மேற்காட்டப்பட்ட சம்பவத்தில் உருவாகியுள்ள அடிப்படை மனித தேவையானது,
   (1) சுகாதாரம் (2) பாதுகாப்பு (3) போக்குவரத்து (4) உணவு

7. ‘‘சமூக நண்பர் சங்கம்’’ உள்ளடக்கப்படும் வணிக அமைப்பு என்ன?
   (1) தனியாள் வணிக அமைப்பாகும் (2) சங்க வகை அமைப்பாகும்
   (3) பங்குடமை வணிக அமைப்பாகும் (4) சேவை வழங்கும் அமைப்பாகும்

8. பருமன் அடிப்படையில் வணிகத்தை வகைப்படுத்தும் போது அடிப்படையாகக் கொள்ளப்படும் நியதிகளாக அமைவது,
   (1) வணிகத்தின் நன்மதிப்பு பெறுமதி (2) வணிகத்தின் உற்பத்தியின் தன்மை
   (3) வணிகத்தின் ஊழியர் எண்ணிக்கை (4) வணிகத்தின் பொறுப்புக்களின் தன்மை

9. வணிகத்தின் பெயரைப் பதிவு செய்வதனால் வணிகத்திற்குக் கிடைக்கும் அனுகூலங்களை மட்டும் கொண்டுள்ள விடையானது பின்வருவனவற்றுள்,
   A - சட்ட ஆளுமை கிடைக்கும்
   B - வணிகத்தின் உரிமை உறுதிப்படுத்தப்படும்
   C - அரசின் கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வது எளிதானது
   D - அரசினால் வழங்கப்படும் சலுகைகளைப் பெற்றுக்கொள்வது எளிதானது
   (1) A, B, C (2) B, C, D (3) A, C, D (4) A, B, D

10. டிலான் என்பவர் தனது நடைமுறைக் கணக்கை இலங்கை வங்கியின் காலி கிளையில் பேணி வருவதுடன் தர்சன் என்பவருடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கலுக்காக கொடுக்க வேண்டிய ரூ. 50 000 தொகையைக் காசோலை மூலம் செலுத்தினார். தர்சன் தனது நடைமுறைக் கணக்கை மாத்தறை கிளையில் பேணி வருகின்றார். இந்த நிகழ்வுகளில் கட்டளை இடுபவர் மற்றும் பணம் பெறுபவரை முறையாகக் காட்டும் விடையானது,
    (1) தர்சன், டிலான் (2) இலங்கை வங்கி காலி கிளை, டிலான்
    (3) இலங்கை வங்கி காலி கிளை, தர்சன் (4) மக்கள் வங்கி மாத்தறை கிளை, தர்சன்

11. கீழ்வரும் கூற்றுக்களில், அதன காப்புறுதி தொடர்பான சரியான கூற்று எது?
    (1) ஒப்பந்தத்தின் பெறுமதி காப்புறுதி செய்பவரின் செலுத்தும் திறனால் தீர்மானிக்கப்படும்
    (2) நிதி நிறுவனங்களில் கடன் பெறும் போது பிணையாகப் பயன்படுத்த முடியும்
    (3) ஆதனத்திற்கு ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மீட்டெடுப்பதற்காக இழப்பீடு வழங்கப்படும்
    (4) சேமிப்பு முறையாக அல்லது முதலீட்டு முறையாகப் பயன்படுத்த முடியும்.

12. சிறு வணிகங்கள் தொடர்பான செயலமர்வு ஒன்று மாத்தளை பிரதேச செயலாளர் காரியாலயத்தில் நடைபெறுமென சிறு வணகமொன்றை நடாத்திச் செல்லும் நிலுகா என்பவருக்கு வட்ஸ்சப் (whatsapp) செய்தியொன்று கிடைத்துள்ளது. இதில் குறிப்பிடப்பட்ட தொடர்பாடல் ஊடகம் மற்றும் முறை என்பவற்றை முறையே காட்டுவது,
    (1) வாய்மொழி, தொலைபேசி (2) இலத்திரனியல், வட்ஸ்சப்
    (3) இலத்திரனியல், எழுத்து (4) வட்ஸ்சப், இலத்திரனியல்

13. மலையகப் பிரதேசத்தில் மண்சரிவு காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவுப் பொதிகளைப் பங்கீடு செய்வதற்காக மிகவும் பொருத்தமான போக்குவரத்து மார்க்கம் மற்றும் போக்குவரத்து ஊடகம் என்பவற்றைக் காட்டும் விடையானது,
    (1) தெரு வழி - மோட்டார் லொறி (2) புகையிரதப் பாதை - புகையிரதம்
    (3) ஆகாய வழி - உலங்கு வானூர்தி (4) நீர் வழி - படகு

14. சிறுவர்களுக்கான ஆடை தைக்கும் வணிகம் நிர்மலாவால் ஆரம்பிக்கப்பட்டதுடன் துணி உட்பட்ட மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்யும் தீர்மானங்களையும், சந்தைப்படுத்தல் செயற்பாடு-களையும் மேற்கொள்ள ஒரு முகாமையாளரை நியமிக்கும் செயற்பாடு வணிகம் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள முகாமைத்துவ செயற்பாடுகளை முறையே காட்டும் விடையானது,
(1) தீர்மானம் எடுத்தல், செயற்படுத்தல் (2) தீர்மானம் எடுத்தல், ஒழுங்கமைத்தல்
(3) ஒழுங்கமைத்தல், தீர்மானம் எடுத்தல் (4) தீர்மானம் எடுத்தல், கட்டுப்படுத்தல்

15. வீட்டு உபகரண விற்பனை நிலையம் ஒன்று இருப்பினை முடிவுறுத்தும் விற்பனை செயற்பாட்டினை 20.12.2025 முதல் 31.12.2025 வரையில் மேற்கொண்டது. நவீன வீட்டு சோபாக்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு 10% கழிவினை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது. மேற்காட்டப்-பட்ட சம்பவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சந்தைப்படுத்தல் மாறிகளாவன,
(1) விலை, கழிவு (2) உற்பத்தி, இடம்
(3) உற்பத்தி, மேம்படுத்தல் (4) மேம்படுத்தல், கழிவு

16. திறைசேரி உண்டியல் கொள்வனவு மற்றும் சாதாரண பங்குகளில் முதலீடு செய்தல் ஆகிய இரு முதலீட்டு முறைகளில் முதலீடு செய்வதால் ஏற்படும் அனுகூலங்களாவன,
(1) பங்குலாபத்தைப் பெற முடிதல்
(2) முதலீட்டு இலாபம் உழைக்க முடிதல்
(3) தேவையான போது காசாக மாற்றிக் கொள்ள முடிதல்
(4) கடன் பெற்றுக்கொள்ளும் போது பிணையாக வழங்க முடிதல்

17. கணக்கீட்டின் நோக்கம் **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?
(1) வணிகத்தில் போதியளவு இலாபம் உழைக்கப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்ளல்.
(2) ஒவ்வொரு வணிகத்தினதும் சட்டத் தேவையைப் பூர்த்தி செய்தல்
(3) குறித்த திகதியில் நிறுவனத்தின் நிதிநிலைமையைக் கணக்கிட முடிதல்
(4) அக்கறையுடைய தரப்பினருக்கு தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்குதல்

18. கீழே காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களில் வணிகத்தின் உரிமையாண்மையில் பாதிப்பினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கலானது,
(1) ரூ. 500 000 ஆன வங்கிக்கடன் பெறல்
(2) ரூ. 80 000 ஆன உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்
(3) ரூ. 20 000 ஆன கடன்கொடுத்தோருக்குக் கொடுப்பனவு செய்தல்
(4) ரூ. 5 000 ஆன வட்டியை உள்ளடக்கிய வங்கிக்கடன் தவணைப்பணம் செலுத்துதல்

19. கொடுக்கல் வாங்கல் காரணமாக கணக்கீட்டில் உருவாகுவது பின்வருவனவற்றுள்,
(1) உரிமையாண்மை (2) பரீட்சைமீதி
(3) நிதிநிலைமைக்கூற்று (4) கொள்வனவு நாளேடு

20. ஸ்ரீகுமார் தளபாட விற்பனை நிலையத்தினை நடாத்திச் செல்கின்றார். அவரின் காரியாலயப் பயன் பாட்டுக்காக ரூ. 100 000 பெறுமதியான தளபாடங்களைக் கடனுக்குக் கொள்வனவு செய்தமையினைப் பதிவு செய்வதற்காகத் திரட்டிக்கொள்ள வேண்டிய மூல ஆவணம் மற்றும் மூலஏடு என்பவற்றைச் சரியாகக் காட்டுவது பின்வருவனவற்றுள்,
(1) கொடுப்பனவுக் கைச்சாத்து மற்றும் காசுப் புத்தகம்
(2) நாட்குறிப்பு கைச்சாத்து மற்றும் பொது நாட்குறிப்பு
(3) கொள்வனவுப் பட்டியல் மற்றும் கொள்வனவு நாளேடு
(4) விற்பனைப் பட்டியல் மற்றும் விற்பளை நாளேடு

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 21 தொடக்கம் 23 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**
குமார் வணிகத்தில் 01.12.2025 திகதியில் அடிப்படைக் கணக்கீட்டு சமன்பாடு பின்வருமாறு,

**சொத்துக்கள் = உரிமையாண்மை + பொறுப்புக்கள்**

ரூ. 800 000 = ரூ. 500 000 + ரூ. 300 000

கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்கள் டிசெம்பர் மாதத்தில் இடம் பெற்றுள்ளன.

A - ரூ. 25 000 ஆன பொருட்கள் கடனுக்கு வாங்கப்பட்டது.

B - ரூ. 10 000 ஆன பொருட்கள் ரூ. 15 000 இற்கு கடனுக்கு விற்கப்பட்டது.

C - ரூ. 3 000 ஆன மின்கட்டணம் செலுத்தப்பட்டது.

D - ரூ. 50 000 ஆன உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது.

21. மேலுள்ள கணக்கீட்டு சமன்பாட்டின் அடிப்படைப் பெறுமதிகளில் மாற்றத்தை ஏற்படுத்தாத கொடுக்கல் வாங்கலாக **அமைவது,**

(1) A (2) B (3) C (4) D

22. மேலுள்ள கொடுக்கல் வாங்கல்களில் குமார் வணிகத்தின் உரிமையாண்மையில் மாற்றத்திற்கு உள்ளாக்கும் கொடுக்கல் வாங்கல்கள் எவை?

(1) A மற்றும் B (2) B மற்றும் C (3) A மற்றும் C (4) A மற்றும் D

23. மேலுள்ள கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் குமார் வணிகத்தின் கணக்கீட்டு சமன்பாட்டில் சரியான தொகைகளைக் காட்டும் விடையானது,

| | **சொத்துக்கள்** | = | **உரிமையாண்மை** | + | **பொறுப்புக்கள்** |
|---|---|---|---|---|---|
| (1) | ரூ. 827 000 | = | ரூ. 527 000 | + | ரூ. 300 000 |
| (2) | ரூ. 827 000 | = | ரூ. 505 000 | + | ரூ. 322 000 |
| (3) | ரூ. 827 000 | = | ரூ. 502 000 | + | ரூ. 325 000 |
| (4) | ரூ. 777 000 | = | ரூ. 477 000 | + | ரூ. 300 000 |

24. மகிந்தனின் வணிகத்தில் 31.12.2025 திகதியில் சில்லறைக் காசு மீதி ரூ. 800 ஆகும். 2026 ஜனவரி மாதத்தில் சில்லறைச் செலவுகளானது ரூ. 5 400 ஆகும். 2026 ஜனவரி மாத இறுதியில் வசக்கட்டினை ரூ. 500 ஆல் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. ஜனவரி மாத இறுதியில் மீள்நிரப்பப்பட வேண்டிய காசானது,

(1) ரூ. 5 100 (2) ரூ. 5 400 (3) ரூ. 5 600 (4) ரூ. 5 900

25. 31.12.2025 அன்று வணிகத்தின் வங்கிக் கணக்கின் மீதி ரூ. 17 800 ஆகும். அன்றைய தினத்துக்கான வங்கிக்கூற்று மீதியானது ரூ. 19 800 ஆகும். இந்த வித்தியாசத்துக்கான காரணமானது,

(1) நிலையான கட்டளைக்கமைய செலுத்திய காப்புறுதிக் கட்டணம் ரூ. 2 000
(2) வைப்புச் செய்யப்பட்ட ஆனால் தேறாத காசோலை ரூ. 2 000
(3) வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணமும் காசோலைப் புத்தகக் கட்டணமும் ரூ. 2 000
(4) பிறப்பிக்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ. 2 000

26. கடன்பட்டோரிடம் பெற்று வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ. 6 000 ஆன காசோலை மறுக்கப்பட்டதுடன் தொடர்புடைய சரியான இரட்டைப் பதிவானது,

(1) வங்கிக் க/கு வரவு ரூ. 6 000, கடன்பட்டோர் க/கு செலவு ரூ. 6 000
(2) கடன்பட்டோர் க/கு வரவு ரூ. 6 000, வங்கிக் க/கு செலவு ரூ. 6 000
(3) கடன்பட்டோர் க/கு வரவு ரூ. 6 000, காசுக் க/கு செலவு ரூ. 6 000
(4) காசுக் க/கு வரவு ரூ. 6 000, வங்கிக் க/கு செலவு ரூ. 6 000

27. வணிகமொன்று பொருட்களைக் கடனுக்கு விற்பனை செய்யும் போது 10% வியாபாரக் கழிவு வழங்குவதுடன் விற்பனைப் பட்டியலில் 5% தேறிய 60 என்ற நிபந்தனையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. 01.12.2025 அன்று பட்டியலிடப்பட்ட விலை ரூ. 50 000 ஆன பண்டங்கள் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது. 31.12.2025 திகதி கடன்பட்டோரால் கடன் தொகை திருப்பிச் செலுத்தப்பட்டது. கடன்பட்டோரால் வழங்கப்பட்ட காசு மற்றும் கழிவினை முறையாகக் காட்டும் விடையானது,

(1) ரூ. 42 750 மற்றும் ரூ. 2 250 (2) ரூ. 45 000 மற்றும் ரூ. 5 000
(3) ரூ. 45 500 மற்றும் ரூ. 4 500 (4) ரூ. 50 000 மற்றும் ரூ. 5 000

28. கீழ்வரும் கணக்கீட்டு வழுக்களினால் பரீட்சைமீதி சமப்படுதலில் பாதிப்பினை **ஏற்படுத்தாத** கொடுக்கல் வாங்கலாக அமைவது எது?
(1) ரூ. 5 000 ஆன கொடுத்த கழிவு கடன்பட்டோர் கணக்கில் மட்டும் பதியப்பட்டது.
(2) ரூ. 5 000 ஆன காசுக்கு விற்பனை விற்பனைக் கணக்கில் ரூ. 500 எனப் பதியப்பட்டிருந்தது.
(3) ரூ. 5 000 ஆன விற்பனைப் பட்டியல் முழுமையாக ஏடுகளிலிருந்து விடப்பட்டிருந்தது.
(4) ரூ. 5 000 கொள்வனவு நாளேட்டின் கூட்டுத்தொகை கொள்வனவுக் கணக்கில் பதிப்படவில்லை.

29. ரூ. 3 000 ஆன பெற்ற கழிவு, பெற்ற கழிவுக் கணக்கில் வரவில் பதியப்பட்டமையை திருத்துவதற்கான இரட்டைப் பதிவானது,
(1) தொங்கல் க/கு - வரவு 3 000, பெற்ற கழிவுக் க/கு - செலவு 3 000
(2) பெற்ற கழிவுக் க/கு - வரவு 6 000, தொங்கல் க/கு - செலவு 6 000
(3) தொங்கல் க/கு - வரவு 6 000, பெற்ற கழிவுக் க/கு - செலவு 6 000
(4) பெற்ற கழிவுக் க/கு - வரவு 3 000, தொங்கல் க/கு - செலவு 3 000

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 30 ஆம் 31 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**
கிழக்கு விளையாட்டுக் கழகத்தின் 31.12.2025 இல் முடிவடையும் வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

**கிழக்கு விளையாட்டுக் கழகம்**
**31.12.2025 இல் முடிவடையும் வருடத்துக்கான பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| மீ.வ. | 43 000 | விளையாட்டு மைதான பராமரிப்புச் செலவு | 12 000 |
| அங்கத்துவக் கட்டணம் | 33 000 | விளையாட்டு உபகரணம் ………..……… | 20 000 |
| | | மின்சார செலவுகள் ………………..……. | 3 000 |
| | | மீ.செ. ………………………..…………... | 41 000 |
| | **76 000** | | **76 000** |
| மீ.வ. | 41 000 | | |

**மேலதிக தகவல்கள் :**
- ஒரு அங்கத்தவரின் வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 1 000 ஆகும். 5 அங்கத்தவர்கள் 2025 வருடத்துக்கான காசினைச் செலுத்தவில்லை.
- சகல செலவுகளும் வருடத்திற்குக் காசாகச் செலுத்தப்பட்டுள்ளது.

30. 31.12.2025 இல் முடிவடையும் வருடத்துக்கான கிழக்கு விளையாட்டுக் கழகத்தின் அங்கத்துவப்பண வருமானமானது,
(1) ரூ. 28 000 (2) ரூ. 33 000 (3) ரூ. 36 000 (4) ரூ. 38 000

31. 31.12.2025 இல் முடிவடையும் வருடத்துக்கு கிழக்கு விளையாட்டுக் கழகத்தின் மிகையானது,
(1) ரூ. 3 000 (2) ரூ. 18 000 (3) ரூ. 23 000 (4) ரூ. 41 000

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 32 ஆம் 33 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**
பூச்சாடிகளை உற்பத்தி செய்கின்ற நிறுவனத்தின் ஜனவரி மாதத்துக்காகத் தரப்படும் கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.
  - உற்பத்தி செய்யப்பட்ட சீமெந்து பூச்சாடிகளின் எண்ணிக்கை 100 ஆகும்.
  - மொத்த உற்பத்திக் கிரயம் ரூ. 180 000 ஆகும்.
  - உற்பத்தி மேந்தலைக் கிரயம் ரூ. 43 000
  - பூச்சாடிக்கான நேர் ஊழியக் கிரயம் ரூ. 300
  - விளம்பரப்படுத்தல் செலவுகள் ரூ. 5 000
  - உற்பத்திக் கிரயத்தில் 10% இலாப எதிர்பார்ப்பில் விற்பனை விலை தீர்மானிக்கப்படுகிறது.

32. ஜனவரி மாத பூச்சாடி உற்பத்தியுடன் தொடர்புடைய நேர் பொருள் கிரயமானது,
(1) ரூ. 107 000 (2) ரூ. 131 700 (3) ரூ. 132 000 (4) ரூ. 137 000

33. அனைத்து பூச்சாடிகளினதும் விற்பனையால் ஜனவரி மாதத்தில் கிடைத்த இலாபமானது,
(1) ரூ. 1 800 (2) ரூ. 13 000 (3) ரூ. 18 000 (4) ரூ. 198 000

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 34 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.** கீழே காட்டப்பட்டுள்ளவை அஞ்சான் வணிகத்தில் 01.01.2025 திகதியில் காணப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களுமாகும்.

**சொத்துக்கள்**

| | | |
|---|---|---|
| காணி | | 200 000 |
| தளபாடங்கள் | 60 000 | |
| திரண்ட பெறுமானத் தேய்வு | (6 000) | 54 000 |
| இருப்பு | | 12 000 |
| கடன்பட்டோர் | | 24 000 |
| காசு | | 48 000 |

**பொறுப்புக்கள்**

| | |
|---|---|
| 12% வங்கிக்கடன் | 100 000 |
| கடன்கொடுத்தோர் | 30 000 |

**வருடகாலத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு**

| | |
|---|---|
| காசுக்குக் கொள்வனவு | 180 000 |
| காசுக்கு விற்பனை | 320 000 |
| கடனுக்கு விற்பனை | 60 000 |
| செலுத்திய மின்சாரப் பட்டியல் | 8 000 |
| விற்பனை ஊழியர் சம்பளம் | 36 000 |
| கடன்பட்டோரிடம் கிடைத்தது | 40 000 |
| கடன்கொடுத்தோருக்குக் கொடுத்தது | 18 000 |
| செலுத்திய வங்கிக்கடன் வட்டி | 7 000 |
| கிடைத்த கட்டட வாடகை | 30 000 |
| விளம்பரம் | 4 000 |

**மேலதிக தகவல்கள் :**

- 31.12.2025 இல் இறுதி இருப்பின் பெறுமதி ரூ. 18 000 ஆகும்.
- கடன்பட்டோரில் ரூ. 2 000 ஆனது அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிக்கப்பட வேண்டும்.
- தளபாடங்களுக்கு நேர்கோட்டு முறையில் 10% வருடாந்த பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டும்.
- 01.01.2025 திகதியிலிருந்து வணிக கட்டடத்தின் ஒரு பகுதி ரூ. 3 000 மாதாந்த வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

34. இந்த வணிகத்தின் 31.12.2025 திகதியில் காசு மீதியானது,
(1) ரூ. 48 000 (2) ரூ. 165 000 (3) ரூ. 185 000 (4) ரூ. 438 000

35. 31.12.2025 திகதியில் கடன்பட்டோர் மீதியானது,
(1) ரூ. 42 000 (2) ரூ. 44 000 (3) ரூ. 60 000 (4) ரூ. 84 000

36. 31.12.2025 இல் முடிவடையும் வருடத்தின் இலாபநட்டக்கூற்றில் காட்டப்படும் விநியோக செலவுகளின் கூட்டுத்தொகையானது,
(1) ரூ. 36 000 (2) ரூ. 38 000 (3) ரூ. 40 000 (4) ரூ. 42 000

37. அஞ்சான் வணிகத்தில் 31.12.2025 இல் முடிவடையும் வருடத்தின் விற்பனைக் கிரயமானது,
(1) ரூ. 162 000 (2) ரூ. 174 000 (3) ரூ. 192 000 (4) ரூ. 230 000

38. 31.12.2025 இல் முடிவடையும் வருடத்தில் இலாபநட்டக்கூற்றில் காட்டப்படும் வங்கிக்கடன் வட்டியானது,
(1) ரூ. 5 000 (2) ரூ. 7 000 (3) ரூ. 12 000 (4) ரூ. 19 000

39. 31.12.2025 திகதியில் இந்த வணிகத்தின் நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்படும் சரியான உருப்படியானது,
(1) கடன்கொடுத்தோர் மீதி ரூ. 30 000 (2) 12% வங்கிக்கடன் ரூ. 93 000
(3) இருப்பு ரூ. 12 000 (4) கிடைக்க வேண்டிய கட்டட வருமானம் ரூ. 6 000

40. 31.12.2025 திகதியில் அஞ்சான் வணிகத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் தேறிய பெறுமதியானது,
(1) ரூ. 248 000 (2) ரூ. 254 000 (3) ரூ. 260 000 (4) ரூ. 314 000

**(40 X 1=40 புள்ளிகள்)**

## வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் II

முக்கியம் : அறிவுறுத்தல்களுக்கமைய **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. மேலதிகமாக எழுதப்படும் விடைகள் பரீட்சார்த்தியினால் வெட்டிவிடப்படாத சந்தர்ப்பத்தில் பரீட்சகரினால் புள்ளிகள் வழங்கப் படாமலேயே வெட்டிவிடப்படும்.

* **முதலாம்** வினா உட்பட, பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும், பகுதி **II** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

**1. பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பட்டதாரியான சஞ்ஜீவன் கம்பஹா நகரின் முன்னணி பாடசாலைக்கருகில் தரம் - 10, 11 வகுப்புகளுக்கான வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் பாடத்துக்கான மேலதிக கற்றல் வகுப்பொன்றினை ''அறிவு ஊற்று'' என்ற பெயரில் நடாத்திச் செல்கின்றார்.

இவரின் கற்பித்தல் பாணி, ஆளுமை, பிள்ளைகளின் ஒழுக்கத்தில் அதிக கவனம் செலுத்துதல் மற்றும் சா/த பரீட்சைப் பெறுபேற்றினை உயர்ந்த மட்டத்தில் பேணுதல் போன்ற காரணங்களால் மாணவர் மற்றும் பெற்றோருக்கிடையில் ''அறிவு ஊற்று'' கம்பஹா நகரில் பிரசித்தியடைந்துள்ளது.

01 டிசெம்பர் 2025 அன்று அறிவு ஊற்று நிறுவனத்தின் மீதிகள் தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| காணி கட்டடம் ……..…….. | ரூ. 1 000 000 |
| தளபாடங்கள் …………….. | ரூ. 400 000 |
| காரியாலய உபகரணங்கள் | ரூ. 180 000 |
| 12% வங்கிக்கடன் ……….. | ரூ. 200 000 |
| காசு ………………………. | ரூ. 480 000 |

01 டிசெம்பர் 2025 அன்று அறிவு ஊற்று நிறுவனத்தில் தற்காலிகமாக உதவியாளர்கள் இருவர் தலா ரூ. 20 000 ஆன சம்பளத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

| | |
|---|---|
| வகுப்புக் கட்டணமாகக் கிடைத்தது ……… | ரூ. 400 000 |
| எழுதுபொருள் மற்றும் கையேடுகள் …..…. | ரூ. 80 000 |
| கட்டட பழுதுபார்ப்புச் செலவுகள் ………..….. | ரூ. 300 000 |
| விளம்பரச் செலவுகள் ……………………..…. | ரூ. 10 000 |
| செலுத்திய மின்கட்டணம் ………………..….. | ரூ. 6 000 |
| போக்குவரத்துச் செலவுகள் …………..…….. | ரூ. 20 000 |

31 டிசெம்பர் 2025 இல் கீழ்வரும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

- தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரணங்களுக்கு வருடாந்தம் 12% பெறுமானத் தேய்வு செய்யப்படும்.
- டிசெம்பர் மாதத்துக்காகக் கிடைக்க வேண்டிய வகுப்புக் கட்டணம் ரூ. 20 000 ஆகக் காணப்பட்டது. அத்துடன் வேலையாட்களின் சம்பளமும் செலுத்தப்படவில்லை.
- அறிவு ஊற்று வணிகத்தை விஸ்தரிக்க விரும்பிய சஞ்ஜீவன் சாதாரண தரத்தின் பிரதான பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிலரை 2026 ஜனவரி மாதத்தில் இணைத்துக்கொள்ளத் தீர்மானித்தார்.

(i) (அ) அறிவு ஊற்று கல்வி நிறுவனம் எவ்வகையான வணிக அமைப்பாகும்?
(ஆ) உற்பத்தித் தன்மைக்கமைய இந்த வணிகம் எவ்வகையைச் சார்ந்தது?

(ii) (அ) இவ்வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படும் மனித தேவையைக் குறிப்பிட்டு அதனுடன் தொடர்புடைய விருப்பங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக
(ஆ) இவ்வணிகத்தில் அக்கறையுடைய தரப்பினர் **இருவரைப்** பெயரிடுக.

(iii) (அ) இந்த வணிகத்தில் காணக்கூடிய பலம் மற்றும் வாய்ப்பு **ஒவ்வொன்று** எழுதுக.

(ஆ) அறிவு ஊற்று வணிகத்தைப் பதிவு செய்வதற்காக சஞ்ஜீவன் விருப்பப்படுகின்றார் எனின் அதனுடன் தொடர்புடைய சட்டம் என்ன?

(iv) இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ செயற்பாடுகளான திட்டமிடல் மற்றும் ஒழுங்கமைத்தலுக்கு **ஒவ்வொரு** உதாரணம் எழுதுக.

(v) (அ) இவ்வணிகத்தில் பயன்படுத்தப்படும் மூலஏடுகள் **இரண்டு** மற்றும் அதற்கான மூல ஆவணங்களையும் பெயரிடுக.

(ஆ) 01.12.2025 திகதியில் இவ்வணிகத்தின் உரிமையாண்மையைக் கணிக்க.

(vi) 31.12.2025 திகதியில் இவ்வணிகத்தின் நடைமுறைப் பொறுப்புக்கள் **இரண்டினைப்** பெறுமதியுடன் காட்டுக.

(vii) (அ) 31.12.2025 இல் முடிவடையும் மாதத்துக்கான இந்த வணிகத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் தேறிய பெறுமதி எவ்வளவு?

(ஆ) டிசெம்பர் மாதத்திற்காக தளபாடங்களின் பெறுமானத் தேய்வைக் கணக்குகளில் பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவினைப் பதிந்து காட்டுக.

(viii) 31.12.2025 திகதியில் இந்த வணிகத்தின் காசுமீதியைக் கணிக்க.

(ix) 31.12.2025 திகதியில் முடிவடையும் மாதத்துக்கான அறிவு ஊற்று நிறுவனத்தின் இலாப நட்டத்தைக் கணிக்க.

(x) 31.12.2025 திகதியில் அறிவு ஊற்று கல்வி நிறுவனத்தின் உரிமையாண்மை எவ்வளவு?

**(02 x 10 = 20 புள்ளிகள்)**

## பகுதி I - வணிகக்கல்வி

**(இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

**2.** (i) அரச கூட்டுத்தாபனத்தின் பண்புகள் **இரண்டு** எழுதுக. **(02 புள்ளிகள்)**

(ii) பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

(அ) ஒரு தேவையைப் பூர்த்தி செய்வதற்காகப் பல்வேறு வகையான விருப்பங்கள் காணப்படும்.

(ஆ) உற்பத்திக் காரணியான மூலதனத்துக்கு வணிகத்தால் வாடகைக்குப் பெறப்பட்ட கட்டடம் உதாரணமாகும்.

(இ) கூட்டுறவுச் சங்கத்தினை ஆரம்பிக்க குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை பத்து பேராகும்.

(ஈ) சில வணிகங்களின் உரிமையாளர் முகாமையாளராகவும் காணப்படுவார்.

**(02 புள்ளிகள்)**

(iii) லக்ஷி என்பவர் வ/ப லக்ஷியா (தனி.) கம்பனி என்ற பெயரில் பாதணி உற்பத்தி நிறுவனம் ஒன்றை நடாத்திச் செல்கின்றார்.

(அ) வ/ப லக்ஷியா கம்பனியால் பூர்த்தி செய்யப்படும் அடிப்படை மனித தேவை என்ன?

(ஆ) மேலுள்ள வணிகம் உள்ளடக்கப்படும் வணிக அமைப்பின் பண்புகள் **இரண்டு** எழுதுக

**(02 புள்ளிகள்)**

(iv) வோல்டர் என்பவரால் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் விற்பனை வணிகமொன்று "**கூல் வோட்டர்** (Cool Water)" என்ற பெயரில் நடாத்தப்படுகிறது.

(அ) வோல்டர் இந்த வணிகத்துக்குப் பங்களிப்புச் செய்யும் **இரண்டு** வழிகளை எழுதுக.

(ஆ) கூல் வோட்டர் வணிகத்தைப் பதிவு செய்ய வேண்டுமா? காரணம் தருக.

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

**3.** (i) மொத்த வியாபாரத்தின் பண்புகள் **இரண்டு** எழுதிக் காட்டுக. **(02 புள்ளிகள்)**

(ii) பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

(அ) வரவட்டை (Debit card) பெற்றுக்கொள்வதற்காக வங்கியில் கணக்கு அவசியமில்லை.

(ஆ) ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்துக்கு இழப்பீட்டுத் தத்துவம் பொருத்தமற்றது.

(இ) தொலைபேசித் தொடர்பாடலானது ஒரு இலத்திரனியல் தொடர்பாடலாகும்.

(ஈ) மாத்தளைப் பிரதேசத்தில் சிறிய ஆற்றிற்கு மேலாக புதிய பாலமொன்றைக் கட்டுவது ஊடகம் என்ற போக்குவரத்து அடிப்படைக்குள் உள்ளடக்கப்படும்.

**(02 புள்ளிகள்)**

(iii) சஜன் என்பவர் ஆடை உற்பத்தித் தொழிற்சாலையை நடாத்திச் செல்வதுடன் வியாபார செயற்பாடுகளுக்கு வசதிக்காக மக்கள் வங்கியில் நடைமுறைக் கணக்கை ஆரம்பித்து பேணி வருகின்றார். அவரின் சகல கொடுப்பனவுகளும் குறுக்குக் கோடிடப்பட்ட காசோலைகளால் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) காசோலையில் குறுக்குக் கோடிடுவதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது என்ன?

(ஆ) நடைமுறைக் கணக்கைப் பேணிவரும் போது வியாபாரத்துக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டு** எழுதுக.

**(02 புள்ளிகள்)**

(iv) விதுரன் தனது வான் வாகனம் மூலமாக அதிவேக நெடுஞ்சாலை ஊடாக மாத்தறை நோக்கிப் பயணம் செய்யும் போது அவரால் விபத்தொன்றுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதன் போது அவரின் வான் வாகனம் சேதமடைந்தமையால் அவர் தொலைபேசி அழைப்பின் ஊடாக காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவித்தார்.

(அ) மேலுள்ள சம்பவத்தில் தெரிவிக்கப்பட்ட காப்புறுதியுடன் தொடர்புடைய கட்சியினரை உதாரணத்துடன் பெயரிடுக.

(ஆ) இதில் காட்டப்பட்டுள்ள போக்குவரத்தின் அடிப்படைக் கூறுகளை உதாரணத்துடன் எழுதிக் காட்டுக.

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

**4.** (i) நிலையான வைப்பில் முதலீடு செய்வதால் கிடைக்கும் நன்மைகள் **இரண்டு** குறிப்பிடுக.

**(02 புள்ளிகள்)**

(ii) பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

(அ) சந்தைப்படுத்தல் கலவை மாறிகளில் வணிகத்துக்கு வருமானத்தைக் கொண்டுவரும் ஒரேயொரு மாறி விலையாகும்.

(ஆ) வரையறுக்கப்பட்ட கம்பனியின் சாதாரண பங்குகளை விலைக்கு வாங்கியவர் அந்த கம்பனியின் உரிமையாளர் ஆகின்றார்.

(இ) திறைசேரி உண்டியல் நீண்டகால முதலீட்டுக் கருவியாகும்.

(ஈ) மனித தேவைகள் மற்றும் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக சந்தைக்கு வழங்கப்படும் எதுவும் உற்பத்தியாகும்.

**(02 புள்ளிகள்)**

(iii) வணிக மகா வித்தியாலயத்தின் மாணவத் தலைவர்கள் குழு, ஆற்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக பாடசாலை உபகரணங்களைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளத் தீர்மானித்தது. அந்த வேலைத்திட்டத்தின் செயற்பாடுகள் வெவ்வேறாகக் கீழ்வருமாறு பட்டியல் இடப்பட்டுள்ளன.

A - பாடசாலை உபகரணங்களை ஒன்று சேர்ப்பதற்கான குழுவை நியமித்தல்.

B - இந்தக் குழு முறையாகச் செயற்படத் தேவையான ஆலோசனை வழங்கல்.

C - பாடசாலை உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்படும் திகதி, நேரம் மற்றும் இடம் தொடர்பான தீர்மானம் எடுத்தல்.

D - பாடசாலை உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் முறையாக இடம்பெறுகின்றது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

மேற்காட்டப்பட்ட ஒவ்வொரு படிமுறையுடனும் தொடர்புடைய முகாமைத்துவ செயற்பாடுகளைப் பெயரிடுக. **(02 புள்ளிகள்)**

(iv) (அ) இலக்குச் சந்தை என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

(ஆ) பிஸ்கற் உற்பத்தி நிறுவனமொன்று புதிய வகை பிஸ்கற்றை உற்பத்தி செய்து ஒரு பைக்கற் ரூ. 50 இற்கு விற்பனை செய்தது.

இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்ட சந்தைப்படுத்தல் கலவை மாறிகள் **இரண்டைப்** பெயரிடுக.

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

## பகுதி II - கணக்கீடு

**(இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

**5.** (i) வணிகத்தின் வருமானம் என்பதை வரைவிலக்கணப்படுத்துக. **(02 புள்ளிகள்)**

(ii) வணிகமொன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் இரண்டுடன் தொடர்புடைய இரட்டைப் பதிவு கீழே காட்டப்பட்டுள்ளது. அந்த இரட்டைப்பதிவுக்கான கொடுக்கல் வாங்களை எழுதிக் காட்டுக.

(அ) காசுக் க/கு ……………….. வரவு 9 000

கொடுத்த கழிவுக் க/கு ….... வரவு 1 000

கடன்பட்டோர் க/கு ….. செலவு 10 000

(ஆ) பற்றுக் க/கு ……………….. வரவு 12 000

காசுக் க/கு ………….. செலவு 12 000

**(02 புள்ளிகள்)**

(iii) தருண் உபகரணங்களைப் பழுதுபார்க்கும் வணிகமொன்றை நடாத்திச் செல்கிறார்.01.01.2026 திகதியில் தருணின் வணிகத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ. 400 000 ஆகவும் மொத்தப் பொறுப்புக்கள் ரூ. 150 000 ஆகவும் இருந்தது. இந்த வணிகத்தின் ஜனவரி மாதத்தின் முதலாம் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

01.02 ரூ. 15 000 ஆன உபகரண பழுதுபார்ப்பு திரவியங்கள் கொள்வனவு செய்யப்பட்டது.

01.03 தருணின் வீட்டு தொலைபேசிப் பட்டியல் ரூ. 6 500 வணிகத்தின் காசில் செலுத்தப்பட்டது.

01.05 உபகரணங்களைப் பழுதுபார்த்தலில் ரூ. 25 000 ஆன வருமானம் பெறப்பட்டதுடன் அதற்காகச் செலவிடப்பட்ட உபகரண பழுதுபார்ப்பு பொருட்களின் பெறுமதி ரூ. 10 000.

01.07 தருணின் சொந்தப் பணத்தில் ரூ. 8 000 ஆன தொகை வணிகத்தின் கடன் கொடுத்தோருக்குச் செலுத்தப்பட்டது.

**வேண்டப்படுவது :**

(அ) மேலுள்ள கொடுக்கல் வாங்கல்கள் தருண் வணிகத்தின் கணக்கீட்டு சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறையினைக் காட்டுக. (விடையளிப்பதற்காக கீழே காட்டப்பட்ட மாதிரியைப் பயன்படுத்தவும்).

| கொ.வா. இல. | திகதி | சொத்துக்கள் | உரிமையாண்மை | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| | 01.02 | + 15 000 (இருப்பு)<br>− 15 000 (காசு) | | |
| | 01.03 | | | |
| | 01.05 | | | |
| | 01.07 | | | |

**(03 புள்ளிகள்)**

(ஆ) மேலுள்ள கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் 07.01.2026 திகதியில் தருணின் வணிகத்தின் உரிமையாண்மையைக் கணக்கிடுக. **(01 புள்ளி)**

(iv) நரேஸின் வணிகத்தின் கடனுக்கு விற்பனை தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| திகதி | பட்டியல் இல. | வாடிக்கையாளர் | பட்டியல் பெறுமதி |
|---|---|---|---|
| 06.01.2026 | 014 | சஜித் | 18 000 |
| 10.01.2026 | 015 | அஜித் | 13 000 |
| 18.01.2026 | 016 | விஜித் | 30 000 |

பட்டியல் பெறுமதியானது ரூ. 20 000 இற்கு மேற்படுமாயின் 10% வியாபாரக்கழிவு வழங்குவது வணிகத்தின் வழக்கமாகும்.

**வேண்டப்படுவது :**

(அ) மேற்காட்டப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை விற்பனை நாளேட்டில் பதிவு செய்க.

(ஆ) 31.01.2026 திகதியில் விற்பனை நாளேட்டின் கொடுக்கல் வாங்கல்களைப் பேரேட்டுக் கணக்கு-களுக்கு மாற்றுக. (சமப்படுத்தத் தேவையில்லை)

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

**6.** (i) (அ) சில்லறைக் காசு வசக்கட்டு என்றால் என்ன?
(ஆ) சில்லறைக் காசு வசக்கட்டை மீளிநிரப்பும் போதான இரட்டைப்பதிவை எழுதுக.

**(02 புள்ளிகள்)**

(ii) புத்தகம் அச்சிடும் குளோபல் புத்தக வெளியீட்டு நிறுவனத்தில் 2026 ஜனவரி மாதத்தில் ஏற்பட்ட செலவுகள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அச்சு இயந்திரத்துக்கான தேய்வு ……………. ரூ. 8 000
(ஆ) கடதாசி கொள்வனவுக்கான செலவுகள் …..…. ரூ. 55 000
(இ) புத்தக எழுத்தாளர்களுக்குச் செலுத்திய காசு ரூ. 20 000
(ஈ) புத்தக தயாரிப்புக்கான பசை ………………... ரூ. 3 000

**வேண்டப்படுவது :**
ஒவ்வொரு செலவுகளும் உள்ளடக்கப்படும் கிரய வகையை எழுதுக.

**(02 புள்ளிகள்)**

(iii) ரூபினி வணிகத்தில் 2026 ஜனவரி மாதத்தில் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

**வங்கிக் க/கு**

| திகதி | விபரம் | பே. ப. | பெறுமதி | திகதி | விபரம் | பே. ப. | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| 01.01 | மீ.வ. | | 22000 | 01.03 | சம்பளம் (490826) | | 15 000 |
| 01.05 | காசோலை (252431) | | 9 000 | 01.07 | நிமல் (490827) | | 5 000 |
| 01.08 | காசு | | 25 000 | 01.12 | கமல் (490828) | | 7 000 |
| 01.13 | காசோலை (351175) | | 31 000 | 01.17 | வாடகை (490829) | | 8 000 |
| 01.30 | காசோலை (127462) | | 10 000 | | மீ.செ. | | 62 000 |
| | | | **97 000** | | | | **97 000** |

**மேலதிக தகவல்கள் :**
ரூபினி வணிகத்தில் வங்கிக்கூற்று மற்றும் வங்கிக் கணக்கின் ஆரம்பமீதி இணங்கியது. எனினும் 2026 ஜனவரி மாதத்துக்காகக் கிடைத்த வங்கிக்கூற்றின் மீதி வங்கிக் கணக்கு மீதியை விட வேறுபட்டுக் காணப்பட்டது. இவ்வேறுபாட்டிற்கான காரணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- 2026 ஜனவரி 31 அன்று 127462 இலக்கக் காசோலை தேறியிருக்கவில்லை.
- 2026 ஜனவரி 31 அன்று வழங்கப்பட்ட 490827 இலக்கமுடைய காசோலை இதுவரை வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.
- 2026 ஜனவரி மாதத்துக்கான வங்கியால் அறவிடப்பட்ட கட்டணம் ரூ. 1 000 ஆகும்.

**வேண்டப்படுவது :**
ஜனவரி மாதத்துக்காக வங்கியால் வணிகத்துக்கு வழங்கப்பட்ட வங்கிக்கூற்று

**(04 புள்ளிகள்)**

(iv) விமலின் வணிகத்தில் 31.12.2025 அன்று தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதியின் வரவு, செலவு நிரல்களின் கூட்டுத்தொகை சமப்படவில்லை. வேறுபாட்டுக்கான காரணங்கள் கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

1. கட்டட பழுதுபார்ப்பு செலவு ரூ. 20 000 கட்டடக் கணக்கில் வரவில் பதியப்பட்டிருந்தது.
2. கடன்பட்டோரிடம் கிடைத்த ரூ. 15 000 காசுக்காக தயாரிக்கப்பட்ட பற்றுச்சீட்டு காணாமல் போய் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.
3. வங்கிக்கடன் பெற்றது ரூ. 100 000 வங்கிக்கடன் கணக்கில் ரூ. 10 000 எனப் பதியப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது :**
மேற்காட்டப்பட்ட வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகள் விளம்பல் உடன்

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

**7.** (i) (அ) இலாபநட்டக்கூற்றில் உள்ளடக்கப்படும் கணக்கீட்டு கூறுகள் / மூலங்கள் **இரண்டு** எழுதுக.
**(02 புள்ளிகள்)**

(ஆ) நட்சத்திர விளையாட்டுச் சங்கத்தின் 31.12.2025 திகதியில் முடிவடையும் வருடத்துக்கான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

- அங் கத்தவர் எண்ணிக்கை 500 ஆகும்.
- மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 100
- வருடகாலத்தில் அங்கத்துவக் கட்டணம் செலுத்திய அங்கத்தவர் எண்ணிக்கை 450 ஆகும்.

**வேண்டப்படுவது :**
வருமானக்கூற்று மற்றும் பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கில் காட்டப்பட வேண்டிய அங்கத்துவக் கட்டணம் என்பவற்றைத் தனித்தனியாகக் கணிக்க. **(02 புள்ளிகள்)**

(ii) தினேஸ் வணிகத்தில் 31.12.2025 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதி கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| மூலதனம் ……………………… | | 700 000 |
| கொள்வனவு ……………………… | 350 000 | |
| பொருள் இருப்பு (01.01.2025) ……………… | 20 000 | |
| விற்பனை ……………………… | | 950 000 |
| கொண்டுவரும் கூலி ……………… | 5 000 | |
| கடன்பட்டோர் ……………………… | 50 000 | |
| கடன்கொடுத்தோர் ……………… | | 62 000 |
| காணி கட்டடம் (கிரயத்தில்) ……………… | 700 000 | |
| தளபாட உபகரணங்கள் (கிரயத்தில்) ……………… | 200 000 | |
| விநியோக வாகனம் (கிரயத்தில்) ……………… | 600 000 | |
| வாகன பெறுமானத் தேய்வு ஏற்பாடு (01.01.2025) | | 70 000 |
| 10% வங்கிக்கடன் ……………………… | | 200 000 |
| செலுத்திய கடன்வட்டி ……………… | 16 000 | |
| மின்கட்டணம் ……………………… | 9 000 | |
| விளம்பரச் செலவுகள் ……………… | 6 000 | |
| சம்பளம் மற்றும் கூலிகள் ……………… | 25 000 | |
| காசு மீதி ……………………… | 7 000 | |
| வங்கி மீதி ……………………… | | 10 500 |
| கொடுத்த கழிவு ……………………… | 2 000 | |
| பெற்ற கழிவு ……………………… | | 1 500 |
| அறவிடமுடியாக்கடன் ……………… | 4 000 | |
| | **1 994 000** | **1 994 000** |

**மேலதிக தகவல்கள் :**

- 31.12.2025 இல் பொருள் இருப்பு ரூ. 50 000 ஆகும்.
- தளபாட உபகரணங்களுக்கு 10% மற்றும் விநியோக வாகனங்களுக்கு 20% வருடத்திற்கு நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடப்பட வேண்டும்.
- கடன்பட்டோரில் ரூ. 5 000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிக்க வேண்டும்.

**வேண்டப்படுவது :**

(1) தினேஸ் வணிகத்தின் 31.12.2025 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கூற்று (04 புள்ளிகள்)
(2) தினேஸ் வணிகத்தின் 31.12.2025 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று
(04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

* * *

## புள்ளி வழங்கும் திட்டம்

### பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. (1) | 2. (3) | 3. (1) | 4. (4) | 5. (3) | | | |
| 6. (4) | 7. (2) | 8. (3) | 9. (2) | 10. (3) | 11. (3) | 12. (2) | 13. (3) |
| 14. (2) | 15. (3) | 16. (3) | 17. (3) | 18. (4) | 19. (1) | 20. (2) | |
| 21. (4) | 22. (2) | 23. (3) | 24. (4) | 25. (4) | 26. (2) | 27. (1) | |
| 28. (3) | 29. (3) | 30. (4) | 31. (3) | 32. (1) | | | |
| 33. (3) | 34. (3) | 35. (1) | 36. (4) | 37. (2) | 38. (3) | 39. (4) | 40. (1) |

### பகுதி - II

**1.** (i) (அ) தனியுடமை வியாபாரம் (01) (ஆ) சேவை வழங்கும் (01)

(ii) (அ) கல்வி (½) – அரச பாடசாலை / தனியார் பாடசாலை / பயிற்சி வகுப்பு / வணிகத் துறை / விஞ்ஞானத் துறை / தொழில்நுட்பத் துறை / வேறு பொருத்தமான விடை (½)

(ஆ) உரிமையாளர் / சஞ்ஜீவன், ஊழியர், பெற்றோர், மாணவர் **(½ x 2 = 01 புள்ளி)**

(iii) (அ) பலம் - சஞ்ஜீவன் ஒரு பட்டதாரி / சிறந்த கற்றல் பாணி மற்றும் ஆளுமை / உயர்ந்த மட்ட பரீட்சைப் பெறுபேறு / சஞ்ஜீவனின் பிரபல்ய தன்மை **(ஏதாவது ஒன்றுக்கு ½ புள்ளி)**

வாய்ப்பு – கல்வி நிறுவனம் பிரபல்யமான பாடசாலைக்கு அருகில் காணப்படுகின்றமை (½)

(ஆ) 1918 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க வணிக பெயர் பதிவு கட்டளைச் சட்டம் / தொடர்புடைய மாகாணத்தின் வியாபார பெயர் பதிவுச் சட்டம் (01)

(iv) (அ) திட்டமிடல் – சா/த வகுப்பு பிரதான பாடங்களுக்கான வகுப்புகளை ஆரம்பிக்க ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளத் தீர்மானித்தமை (01)

(ஆ) ஒழுங்கமைத்தல் – இரு ஊழியர்களை இணைத்துக் கொண்டமை (01)

(v) (அ) காசுப் புத்தகம் – பற்றுச்சீட்டு / கைச்சாத்து (½)
பொதுநாட்குறிப்பு – நாட்குறிப்புக் கைச்சாத்து (½)

> மூலஏடு மற்றும் மூல ஆவணம் இரண்டும் சரியாகக் குறிப்பிட்டால் ½ புள்ளி

(ஆ)

| | | |
|---|---|---|
| மொத்த சொத்துக்கள் | 2 060 000 | ½ |
| பொறுப்புக்கள் | (200 000) | ½ |
| **உரிமையாண்மை** | **1 860 000** | (01) |

(vi) ஊழியர் சம்பளம் – 40 000 (01) வங்கிக்கடன் வட்டி – 20 000 (01)

(vii) (அ) நடைமுறையல்லாச் சொத்துக்களின் தேறிய பெறுமதி –

| | கிரயம் | தி.பெ.தே. | தேறியது | |
|---|---|---|---|---|
| காணி கட்டடம் | 1 000 000 | -- | 1 000 000 | |
| தளபாடங்கள் | 400 000 | 4 000 | 396 000 | ½ |
| காரியாலய உபகரணங்கள் | 180 000 | 1 800 | 178 200 | ½ |
| | **1 580 000** | **5 800** | **1 574 200** | (01) |

(ஆ) தளபாட பெறுமானத் தேய்வுக் க/கு வரவு 4 000 (01)
தளபாட பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் க/கு செலவு 4 000
(தளபாட பெறுமானத் தேய்வு ரூ. 4 000 ஏடுகளில் பதியப்பட்டது)
**** (விளம்பல் எழுதப்படாவிடின் ½ புள்ளி மட்டும் வழங்குக.)**

(viii) காசு மீதி - ரூ. 464 000 (02) (480 000 + 400 000 – 80 000 – 300 000 – 10 000 – 6 000 – 20 000)
**** (இரண்டு சரியான விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் கூடியது 1½ புள்ளிகள்)**

(ix) நட்டம் - 43 800 (02)
(420 000 – 80 000 – 300 000 – 10 000 – 6 000 – 20 000 – 2 000 – 4 000 – 1 800 – 40 000)
½ ½ ½ ½

(x) உரிமையாண்மை – 1 816 200 (02) 01 1 860 000 – 01 43 800

| Q1 | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 20 |

**2.** (i) (அ) 1. உரிமையும் நிர்வாகமும் அரசாங்கத்துக்குரியது
2. தனிமனித அந்தஸ்து இருத்தல்
3. விசேட சட்டம் / தற்போதுள்ள பொதுச் சட்டத்தினூடாக உருவாக்கப்படும்
4. தொடரந்தியங்கும் தன்மை இருத்தல் **(1 x 2 = 02 புள்ளிகள்)**

(ii) (அ) உண்மை (½) (ஆ) உண்மை (½)
(இ) உண்மை (½) (ஈ) உண்மை (½) **(02 புள்ளிகள்)**

(iii) (அ) உடை (01)
(ஆ) 1. கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும்
2. தொடர்ந்து இயங்கும் தன்மை இருத்தல்
3. வரையறுக்கப்பட்ட நட்டப்பொறுப்பு காணப்படல்
4. கட்டாயம் பதிவு செய்யப்படல வேண்டும்
5. பங்குகளை வெளியிடுவதன் மூலம் மூலதனத்தைத் திரட்டலாம் **(½ x 2 = 01 புள்ளி)**
**(02 புள்ளிகள்)**

(iv) (அ) 1. போதியளவு மூலதனத்தை வழங்குதல்
2. வியாபார செயற்பாடுகளில் முழுமையான பங்களிப்பை வழங்குதல்
3. வியாபார செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் **(½ x 2 = 01 புள்ளி)**

(ஆ) பதிவு செய்ய வேண்டும் (½)

உரிமையாளரின் முழுமையான பெயரில் வணிகம் காணப்படாமையால் பதிவு செய்ய வேண்டும் (½) **(02 புள்ளிகள்)**

| Q2 | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2 | 2 | 2 | 2 | 8 |

**3.** (i) (அ) 1. மீள் விற்பனை செய்யும் நோக்கில் பொருள்களைக் கொள்வனவு செய்தல்
2. பெரும்பாலும் பெருந்தொகையான பொருட்கள் விற்பனைக்கு காணப்படல்
3. தெரிவு செய்யப்பட்ட சில வகைப் பொருட்கள் மட்டுமே விற்பனைக்கு வைத்திருத்தல்
4. பொதுவாக அலகுக்கான விற்பனை விலை குறைவாகக் காணப்படல்
5. வியாபாரக் கழிவு வழங்கப்படல் **(1 x 2 = 02 புள்ளிகள்)**

(ii) (அ) பொய் (½) (ஆ) உண்மை (½)
(இ) பொய் (½) (ஈ) உண்மை (½) **(02 புள்ளிகள்)**

(iii) (அ) காசோலையை கூடிய பாதுகாப்பாக வழங்குதல் (01)

(ஆ) 1. காசோலை மூலம் பாதுகாப்பாகக் கொடுக்கல் வாங்கல் செய்ய முடிதல்
2. வங்கி மேலதிகப்பற்று வசதிகளைப் பெற்றுக்கொள்ளல்
3. நேரடி வைப்புக்களை நடைமுறைப்படுத்தல்
4. நிலையியற் கட்டளைகளைச் செயற்படுத்தல்
5. வங்கிக்கூற்றைப் பெறுல் **(½ x 2 = 01 புள்ளி)**

**(02 புள்ளிகள்)**

(iv) (அ) காப்புறுதி செய்பவர் - விதுரன்
காப்புறுதி அளிப்பவர் - காப்புறுதிக் கம்பனி **(½ x 2 = 01 புள்ளி)**

(ஆ) ஊடகம் - அதிவேக நெடுஞ்சாலை
சாதனம் - வான் வண்டி **(½ x 2 = 01 புள்ளி)**

**(02 புள்ளிகள்)**

| Q2 | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2 | 2 | 2 | 2 | 8 |

**4.** (i) (அ) 1. சேமிப்புக் கணக்குடன் ஒப்பிடும் போது கூடிய வட்டி வருமானம்
2. காலத்தவணை முடிவின் பின்னர் / அதற்கு முன்னர் பணத்தை மீளப்பெறலாம்
3. நிலையான வைப்புச் சான்றிதழை பிணையாகக் கொடுத்து கடன் பெறலாம்
4. பாதுகாப்பான முதலீட்டு வழியாகக் காணப்படும் **(1 x 2 = 02 புள்ளிகள்)**

(ii) (அ) உண்மை (½) (ஆ) உண்மை (½)
(இ) பொய் (½) (ஈ) உண்மை (½) **(02 புள்ளிகள்)**

(iii) A - ஒழுங்கமைப்பு (½) B - நெறிப்படுத்தல் (½)
C - தீர்மானம் எடுத்தல் (½) D - கட்டுப்படுத்தல் (½) **(02 புள்ளிகள்)**

(iv) (அ) இலக்குச் சந்தை என்பது வணிகத்துக்கு மிகவும் கவர்ச்சிகரமாகவும் இலாபத்தன்மையுடன் திருப்திப்படுத்தக்கூடிய நுகர்வோர்களை உள்ளடக்கிய சந்தைப் பாங்காகும். (01)

(ஆ) உற்பத்தி (½) விலை (½) **(02 புள்ளிகள்)**

| Q2 | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2 | 2 | 2 | 2 | 8 |

**5.** (i) வருமானம் என்பது உரிமையாளரினால் ஈடுபடுத்தப்படும் மூலதனம் தவிர்ந்த உரிமையாண்மையில் ஏற்படும் ஏனைய அதிகரிப்புக்களாகும். (02) **(02 புள்ளிகள்)**

(ii) (அ) கடன்பட்டோரிடம் பெறவேண்டிய ரூ. 10 000 ஆனது ரூ. 1 000 கழிவுடன் மீதி காசாகப் பெறப்பட்டது. **அல்லது** பொருத்தமான கொடுக்கல் வாங்கல் எழுதினால் (01)

(ஆ) ரூ. 12 000 காசு உரிமையாளரால் பற்றப்பட்டது. (01) **(02 புள்ளிகள்)**

(iii) (அ)

| திகதி | சொத்துக்கள் | உரிமையாண்மை | பொறுப்புக்கள் |
|---|---|---|---|
| 01.02 | + 15 000 (இருப்பு)<br>– 15 000 (காசு) | | |
| 01.03 | – 6500 (காசு) | – 6500 (மூலதனம்) | (01) |
| 01.05 | + 25 000 (காசு)<br>– 10 000 (இருப்பு) | + 15 000 (இலாபம்) | (01) |
| 01.07 | | + 8 000 (மூலதனம்) | – 8 000<br>(கடன்கொடுத்தோர் (01) |

(ஆ) உரிமையாண்மை - ரூ. 266 500 (01) (400 000 – 250 000 + 6 500 + 15 000 + 8 000)
½

**(04 புள்ளிகள்)**

(iv)

**விற்பனை நாளேடு**

| திகதி | ப.இ. | வாடிக்கையாளர் | பே.ப. | பெறுமதி |
|---|---|---|---|---|
| 06.01.2026 | 014 | சஜித் | | 18 000 (½) |
| 10.01.2026 | 015 | அஜித் | | 13 000 (½) |
| 18.01.2026 | 016 | விஜித் | | 27 000 (½) |
| | | விற்பனைக் கணக்கில் வெலவு வைக்கப்பட்டது | | **58 000** (½) |

விற்பனைக் க/கு

| திகதி | விபரம் | பெறுமதி | திகதி | விபரம் | பெறுமதி |
|---|---|---|---|---|---|
| | | | 31.01.2026 | கடன்பட்டோர் | 58 000 (½) |

சஜித் க/கு

| திகதி | விபரம் | பெறுமதி | திகதி | விபரம் | பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 06.01.2026 | விற்பனை | 18 000 (½) | | | |

அஜித் க/கு

| திகதி | விபரம் | பெறுமதி | திகதி | விபரம் | பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 10.01.2026 | விற்பனை | 13 000 (½) | | | |

விஜித் க/கு

| திகதி | விபரம் | பெறுமதி | திகதி | விபரம் | பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 18.01.2026 | விற்பனை | 27 000 (½) | | | |

**(04 புள்ளிகள்)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Q5** | | | | | |
| | **2** | **2** | **4** | **4** | **12** |

**6.** (i) (அ) சில்லறைக்காசு வசக்கட்டு பிரதான காசாளரால் சில்லறைச் செலவுகளை மேற்கொள்வதற்காக சில்லறைக் காசாளருக்கு வழங்கப்படும் தொகையாகும். (01)

(ஆ) சில்லறைக் காசுக் க/கு வரவு
காசுக் க/கு செலவு (01) **(02 புள்ளிகள்)**

(ii) (அ) ஏனைய நேரில் செலவுகள் (½) (ஆ) நேர் பொருள் (½)
(இ) ஏனைய நேர் செலவுகள் (½) (ஈ) நேரில் பொருள் (½) **(02 புள்ளிகள்)**

(iii) 2026 ஜனவரி மாதத்துக்கான வங்கிக்கூற்று

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 01.01 | மீ.வ. | | | 22 000 (½) |
| 01.03 | 490826 (சம்பளம்) | 15 000 | | 7 000 |
| 01.05 | 252431 | | 9 000 (½) | 16 000 |
| 01.08 | வைப்பு | | 25 000 (½) | 41 000 |
| 01.12 | 490828 (கமல்) | 7 000 (01) | | 34 000 |
| 01.13 | 351175 | | 31 000 (½) | 65 000 |
| 01.17 | 490829 (வாடகை) | 8 000 | | 57 000 |
| 01.31 | கட்டணம் | 1 000 (½) | | (½) 56 000 |

** வரவில் 3 விடயங்கள் சரியாயின் **01 புள்ளி,** 2 விடயங்கள் சரியாயின் **½** புள்ளி வழங்குக.
**(04 புள்ளிகள்)**

(iv) பொது நாட்குறிப்பு

| திகதி | கை. இ. | விபரம் | | பே. ப. | வரவு | செலவு |
|---|---|---|---|---|---|---|
| (1) | | கட்டட பழுதுபார்ப்பு செலவுக் க/கு | வரவு | | 20 000 | |
| | | கட்டட க/கு | செலவு | | | 20 000 (01) |
| | | (கட்டட கணக்கில் பதியப்பட்ட புழுதுபார்ப்புச் செலவு ரூ. 20 000 திஜத்தப்பட்டது) | | | | |
| (2) | | காசுக் க/கு | வரவு | | 15 000 | |
| | | கடன்பட்டோர் க/கு | செலவு | | | 15 000 (01) |
| | | (ஏடுகளில் பதியப்படாத கடன்பட்டோரிடம் பெற்ற காசு ரூ. 15 000 பதியப்பட்டுத) | | | | |
| (3) | | தொங்கல் க/கு | வரவு | | 90 000 | |
| | | வங்கிக்கடன் க/கு | செலவு | | | 90 000 (01) |
| | | வங்கிக்கடன் கணக்கில் குறைவாகப் பதியப்பட்ட ரூ. 90 000 திருத்தப்பட்டது) | | | | |

** பொதுநாட்குறிப்பின் அமைப்பு (குறைந்தது 4 விடயங்கள்) (½)

** **மூன்று** விளம்பல்களும் எழுதியிருந்தால் (½) **(04 புள்ளிகள்)**

| Q6 | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2 | 2 | 4 | 4 | 12 |

**7.** (i) (அ) வருமானம் (01) செலவுகள் (01)

**(02 புள்ளிகள்)**

(ஆ) வருமானக்கூற்று - ரூ. 600 000 (01) **OR** 1 200 X 500 = 600 000
(½) (½)

பெறுவனவு கொடுப்பனவுக் க/கு - ரூ. 540 000 **OR** 1 200 X 450 = 540 000
(½) (½)

**(02 புள்ளிகள்)**

(ii) (1)

**தினேஸ் வியாபாரம்**

**31.12.2025 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டக்கூற்று** (½)

| | | |
|---|---|---|
| விற்பனை | | 950 000 |
| **விற்பனைக் கிரயம்** | | |
| இருப்பு | 20 000 | |
| கொள்வனவு | 350 000 | |
| கொண்டுவரும் கூலி | 5 000 | |
| | 375 000 | |
| இருப்பு | (50 000)(½) | (325 000) |
| மொத்த இலாபம் | (½) | 625 000 |
| **ஏனைய வருமானம்** | | |
| கழிவு | | 1 500 |
| | | 626 500 |

**விநியோக செலவுகள்**

| | | | |
|---|---|---|---|
| அறவிடமுடியாக்கடன் | 9 000 ½ | | |
| வாகன பெறுமானத் தேய்வு | 120 000 ½ | | |
| விளம்பரம் | 6 000 | | |
| கழிவு | 2 000 | 137 000 | |
| **நிர்வாக செலவுகள்** | | | |
| தளபாட பெறுமானத் தேய்வு | 20 000 ½ | | |
| மின்கட்டணம் | 9 000 | | |
| சம்பளம் | 25 000 | 54 000 | |
| **நிதிச் செலவுகள்** | | | |
| வட்டி | | 20 000 ½ | (211 000) |
| தேறிய இலாபம் (முலதன கணக்கிற்கு மாற்றியது) | | | ½ **415 500** |

**(04 புள்ளிகள்)**

(2) **தினேஸ் வியாபாரம்**

**31.12.2025 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று** ½

| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | **கிரயம்** | **தி.பெ.தே.** | **தேறியது** ½ |
|---|---|---|---|
| காணி கட்டடம் | 700 000 | ---- | 700 000 |
| தளபாட உபகரணங்கள் | 200 000 | 20 000 | 180 000 |
| விநியோக வாகனம் | 600 000 | 190 000 | 410 000 |
| | **1 500 000** | **210 000** | **1 290 000** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | ½ | ½ |
| இருப்பு | | 50 000 ½ | |
| கடன்பட்டோர் | | 45 000 ½ | |
| காசு | | 7 000 | 102 000 |
| | | | **1 392 000** |
| **உரிமையாண்மை** | | | |
| மூலதனம் | | | 700 000 |
| தேறிய இலாபம் | | | ½ 415 500 |
| | | | 1 115 500 |
| **நடைமுறையல்லாப் பெறுப்புக்கள்** | | | |
| 10% வங்கிக்கடன் | | | 200 000 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கடன்கொடுத்தோர் | | 62 000 | |
| வங்கி | | 10 500 | |
| வட்டி | | 4 000 ½ | 76 500 |
| | | | **1 392 000** |

**(04 புள்ளிகள்)**

| **Q7** | | | | | |
|---|---|---|---|---|---|
| | **2** | **2** | **4** | **4** | **12** |